# 56. விதியும் மதியும்

பொன்னம்பலம், ராஜகோபாலன், சுவாமிநாதன், ராமசாமி, நான், ஸ்ரீனிவாசன் ஆகிய ஆறுபேரும் வழக்கமாக மாலை வேளையில் 'வாக்' போகக் கிளம்பினோம். ஆறாவது ஆசாமி ஸ்ரீனிவாசன் முதல்நாள் நடந்த மோட்டார் விபத்தின் பயனாய் ஆஸ்பத்திரியில் கிடந்தார். அவருடன் சென்ற நால்வரில் ஒருவர் அந்த இடத்திலேயே மாண்டுபோனார். ஸ்ரீனிவாசனுக்கும் இன்னொருவருக்கும் பலத்த அடி இன்னொருவரும் வண்டியோட்டியும் காயமில்லாமல் தப்பித்துக் கொண்டார்கள். ஏன் அவர்களிருவர் மட்டும் காயங்கூடப் படாமல் தப்பித்துக் கொண்டார்கள். மற்றவர்கள் படுகாயமடைந்தும் உயிரை இழந்தும் விட்டார்கள் என்பது பற்றி இந்த ஐந்து பேர்களுக்குள்ளும் விவாதம். ஒருவர் விதி என்றார். மற்றொருவர் மதி என்றார். அதன் பலனாகச் சில விதிக்கதைகளைச் சிலர் சொன்னார்கள். சுவாமிநாதனும் ஒரு ருசிகரமான கதையை ஆரம்பித்தார்.

சுவாமிநாதன் சிறிதுநேரம் மௌனமாகவே இருந்தார். பின்னர் ஒருதரம் இருமினார். கனைத்துக்கொண்டார். அப்புறம் பின் வருமாறு ஆரம்பித்தார். "இந்தக் கதை சற்றுப் பழங்காலத்துக் கதைதான். ஆனால் ஆதிகாலத்துக் கதை என்று சொல்லமுடியாது. உண்மையில் நடந்தது என்று நீங்கள் நம்ப மறுத்தாலும் மறுக்கலாம். ஆனால் பல வருஷங்களுக்கு முன் இதைச் சொன்ன என் தாத்தா உண்மை என்று நம்பித்தான் சொன்னார். நானும் உண்மை என்றுதான் நம்பினேன். இப்பொழுதும் இதை உண்மை என்றே நம்பலாம் என்றுதான் நான் நினைக்கிறேன்."

மறுபடியும் சிறிதுநேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்தவர் போலச் சுவாமிநாதன் மௌனமாக இருந்தார். ராஜகோபால் சற்றுத் தணிந்த குரலில். "நாழியாகிறதே!" என்று சொன்ன பிறகுதான் மேலே சொன்னார்.

"நம் நாட்டு ஞானிகளுக்கும் மேல் நாட்டு ஞானிகளுக்கும்

உள்ள ஒரு வித்தியாசத்தை நீங்களும் கவனித்திருக்கலாம். ஆங்கிலேயர்கள் ஸாக்ரடீஸ், பிளேடோ, அரிஸ்டாடில் என்றெல்லாம் சொல்லி நம்மை வாசிக்கவைத்துத் திக்குமுக்காட விட்டு விட்டார்களே! அவர்களைப் பற்றிச் சிறிது சிந்தித்தோமானால் நான் சொல்லப் போகும் விஷயம் விளங்கிவிடும். உதாரணமாக ஸாக்ரடீஸை எடுத்துக் கொள்ளுவோம். அவனுடைய தத்துவ விசார முறை மிகவும் எளியது. யாரையும் வலிய இழுத்து வைத்துத் தொணதொணவென்று பேசிக் கழுத்தை அறுத்துவிடுவான். இந்தத் தொணதொணப்பு ஒழிய வேணுமே என்று, போலீஸாரிடம் சிக்கிக் கொண்ட குற்றவாளி போல, எதிரி ஸாக்ரடீஸ் சொல்லுவதைத் தேமேனு ஒப்புக்கொண்டு நகர்ந்துவிடுவான். ஸாக்ரடீஸுக்கும் அவன் சிஷ்யர்களுக்கும் பரம திருப்தியாகிவிடும். தங்கள் கொள்கை சரியானது என்று எதிரி வார்த்தையளவில் ஒப்புக் கொண்டுவிட்டால் போதுமானது என்று அவர்கள் நினைத்தார்கள். மேல்நாட்டுத் தத்துவ விசாரத்துக் கெல்லாமே இக்குறை பொதுவான குறைதான். ஒரு உண்மை எழுத்தில், வார்த்தையில் தோன்றிவிட்டால் போதும் என்று அவர்கள் நினைப்பு. அந்த உண்மையை வாழ்க்கையோடு ஒட்டிப்பார்த்து, அதைத் தினசரி நடைமுறை வாழ்க்கையில் கொண்டுவருவது எப்படி என்று அங்கு படே படே தத்துவ ஞானிகள்கூடச் சிந்தித்துப் பார்த்து வழிகாட்டியதாகத் தெரிய வில்லை. பெரிய தத்துவஞானிகள் சிலருடைய வாழ்க்கை அவர்களுடைய உண்மைக்கு ஒட்டியே இருந்தது என்பது வாஸ்தவம் தான். ஆனால் பிறரும் அப்படி வாழவேண்டியது அவசியம் என்று அவர்கள் நினைக்கவில்லை. தங்கள் வார்த்தைகளை ஒப்புக்கொண்டு ஆமோதித்துவிட்டால் போதும் என்றே அவர்கள் எண்ணினார்கள். சவப் பெட்டிகளில் பெட்டிக்கு ஒன்றாகப் பிரேதங்களை அடைப்பது போல, அவர்கள் உண்மைகளை வாழ்க்கையினின்றும் பிரித்து, அபாயம் என்று சிவப்பு மசியிலும், தத்துவம் என்று கருப்பு மசியிலும் எழுதி, சீட்டு ஒட்டி, கிட்ட வராதே என்று சாமான்யர்களை ஒதுக்கிவைக்கவே முயன்றார்கள். நான் சொல்லுவது பூரணமாக உங்களுக்குப் புரிகிறதோ என்னவோ! நமது சர்வ கலாசாலைகளில் இன்று போதிக்கப்படும் கல்வியையும் அதன் தன்மைகளையும் அறிந்தவர்களுக்கு நான் சொல்லுவது ஒருவாறு விளங்கக்கூடும். இந்த மேல் படிப்புக்கும் வாழ்க்கைக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறதோ அவ்வளவு தூரம் இருக்கிறது தத்துவங்களுக்கும் மேல் நாட்டவரின் வாழ்க்கைக்கும். நம் நாட்டில் என்றுமே அப்படியிருந்ததில்லை. புத்தரை உதாரணமாக எடுத்துக் கொண்டால் நான் சொல்லுவது நன்கு விளங்கும்..."



இந்த மாதிரி இன்னும் எவ்வளவு வருமோ, வீடு திரும்பப் பாதி ராத்திரியாகிவிடப் போகிறதோ என்று ராஜகோபால் மறுபடியும் குறுக்கிட்டார். "நாழியாகிறதே! இந்தத் தத்துவ விசாரத்தை எல்லாம் சாவகாசமாக வைத்துக் கொள்ளலாமே. ரத்தினச் சுருக்கமாகக் கதையைச் சொல்லும்."

"இல்லாவிட்டால் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். போகலாமே," என்றார் பொன்னம்பலம்.

இப்படி இவர்கள் குறுக்கிட்டதைப் பற்றிச் சுவாமிநாதன், வழக்கத்துக்கு விரோதமாகக் கோபித்துக் கொள்ளாமலே இருந்து விட்டார். "சுருக்கமாகவே ஐந்து நிமிஷத்தில் சொல்லி விடுகிறேன். தவிரவும் சற்று லேட்டாகவேதானே கிளம்பினோம். சற்று லேட்டாகவே திரும்பினால் போச்சு," என்றார். ராஜகோபாலும் பொன்னம்பலமும் தன் தத்துவ விசாரத்தில் குறுக்கிட்டது பற்றிச் சுவாமிநாதனுக்குக் கோபம் ஏன் வரவில்லையென்று சிறிது நேரம் யோசித்த பின்தான் எனக்குப் புலப்பட்டது. எங்கேயோ ஏதோ ஆழந்தெரியாமல் தத்துவ விசாரத்தில் அவர் காலை விட்டுவிட்டார். எங்களைப் போலவே அவருக்கும் அவர் சொல்ல வந்த கதைக்கும் இந்த தத்துவ விசாரத்துக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. இதிலிருந்து மீண்டும் கதையை எப்படி ஆரம்பிப்பது என்று அறியாமல் அவர் திண்டாடிக் கொண்டிருந்த சமயம் நண்பர்கள் குறுக்கிட்டு விட்டார்கள். நல்லதாகப் போச்சு. இந்த மாதிரிச் சிந்தனையில் நான் ஆழ்ந்திருந்தபடியால் அவருடைய ஆரம்ப வாக்கியங்கள் என் காதில் விழவில்லை. நானும் கதையைக் கவனித்தேன்.

சுவாமிநாதன் சொன்னார்: "மனிதன் உயிரைக் கொள்ளை கொள்ள அந்த நாட்களில் எல்லாம் எமனுக்குப் போட்டியாக ரெயிலோ, மோட்டாரோ, ஏரோப்பிளேனோ கிடையாது. ஆனால் அப்போது ஜனங்களுக்குத் தெய்வபக்தி அதிகம். ஊர் ஊராக க்ஷேத்ராடனம் செய்ய வேணுமென்ற ஆவலும் அதிகம். போக்கு வண்டியிலோ நடந்தோதான் போயாகவேணும். இப்போது உள்ளதைப் போல போலீஸோ, பந்தோபஸ்தோ கிடையாதுதான். எனினும் அதற்காகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பலர் நெடுந்தூரம் காசி எங்கே, ராமேசுவரம் எங்கே என்று நிர்பயமாகக்

கால்நடையாகவே கிளம்பிச் சுற்றிவிட்டு வந்துவிடுவார்கள். க்ஷேத்திராடனம் செய்து சம்பாதித்த புண்ய மூட்டையுடன் ஊர் திரும்பச் சிலருக்கு மூணு மாதங்களுக்குமேல் பிடிக்கும். காசி, பத்ரிநாத் என்று கிளம்பிவிட்டால் திரும்பிவர மாதக்கணக்குப் போய், வருஷக் கணக்கானாலும் ஆகிவிடும். காசியிலேயே மரணம் கிடைத்து விட்டாலும் நல்லதாகப் போச்சு. புண்ணியந்தான்.

"இம்மாதிரிக் கால்நடையாக ராமேசுவரம் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ஒரு கோஷ்டியைப் பற்றித்தான் இந்தக் கதை. அந்தக் கோஷ்டியில் ஆணும் பெண்ணுமாகச் சுமார் நாற்பது பேர்வழிகள் இருந்தார்கள். அவர்கள் எல்லாருமே வாழ்க்கைப் போரில் பல விதத்திலும் இடிபட்டவர்கள்; கொஞ்சம் வயதானவர் கள்தான். ஊரில் அவர்களில் ஒவ்வொருவருக்கும் நாலைந்து பேரன் பேத்திமாராவது இருப்பார்கள். எதற்காக இதை எல்லாம் இவ்வளவு விவரமாகச் சொல்லுகிறேன் என்றால் இந்தச் சம்பவம் உண்மை யிலேயே நடந்திருக்கும் என்று நீங்கள் மனசில் திடப்படுத்திக் கொள்ளவேணும் என்றுதான்.

"ராஜகோபால் மறுபடியும் கோபித்துக் கொள்ளுமுன் கதையை முடித்துவிடுகிறேன். எனக்கும் நாழியாகிக்கொண்டு தானே இருக்கிறது. வீட்டுக்குப் போக வேண்டாமா? ராமேசுவரம் போகும்போது இதே முப்பத்தேழு பேரும் சேர்ந்து போகவில்லை. சிறுசிறு கோஷ்டிகளாக வெவ்வேறு ஊர்களிலிருந்து கிளம்பி ஆடி அமாவாசையன்று ராமேசுவரத்தில் இருந்தவர்கள். எல்லோருக்கும் சொந்த ஊர் தஞ்சை ஜில்லாவிலேதான். தனித்தனியே அவரவர் சௌகரியப்படி பொங்கித் தின்றுகொண்டு செல்லுவதுதான் இந்த மாதிரி யாத்திரீகர்களின் வழக்கம். சேர்ந்து ஊர் திரும்புவதில் நஷ்டமில்லை. வழியில் திருட்டு முதலிய பயங்களும் குறையும். கூட்டமாக இருந்தால் நடைவழி தோன்றாது. எல்லாரும் வழியிலிருந்த பிரபல க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு சாவகாசமாகக் கவலையில்லாமல் ஊர் திரும்பலாம் என்று திட்டம் போட்டார்கள்.

"அவர்கள் பழனி வந்து சேரும்போது புரட்டாசி பிறந்து விட்டது. பழனியில் இரண்டுநாள் தங்கிவிட்டு மழை வலுக்குமுன் ஊர் திரும்பிவிட வேணும் என்று அவர்கள் தீர்மானித்துச் சற்றுத் துரிதமாகவே பிரயாணம் செய்தார்கள். ஆனால் வழியிலேயே மழை வலுத்துவிட்டது. மழை பெய்யாத இடங்களிலெல்லாம்கூட அந்த



வருஷம் அடைமழையாம். திடீரென்று ஒருநாள் காற்றும் மழையும் வலுத்து நம் கோஷ்டியைச் சூழ்ந்துகொண்டது. மழையும், புயலும், இடியும், மின்னலும் வலுக்க ஆரம்பித்தபோது அவர்களிருந்த இடம் ஒரு நிர்மானுஷ்யமான பொட்டல். சுற்று வட்டத்தில் வெகுதூரம் வரையில் மனுஷ்ய சஞ்சாரமோ. மனிதர் வசிக்கும் வீடுகளோ இல்லை. எதிர்ப்பட்ட ஒரு பாழடைந்த மண்டபத்தில் அந்த முப்பத்தேழு பேரும் மழைக்கு ஒதுங்கினார்கள். அவர்கள் எல்லாரும் அங்கு நிற்கப் போதிய இடமில்லை. ஒருவரை ஒருவர் நெருக்கி அடித்துக் கொண்டு நின்றார்கள். மண்டபத்தின் மேல் கூரை பாதி இடிந்து கீழே விழுந்திருந்தது. ஆனால் கண்ணுக் கெட்டியவரையில் சுற்றுப் பிரதேசத்திலே வேறு ஒரு கட்டிடமும் தென்படவில்லை. அந்தப் பிரதேசத்தில் அதிகமாகப் புல் பூண்டைக் கூடக் காணவில்லை. மண்டபத்துக்கு இருபது கஜத்துக்கப்பால் ஒரு மொட்டைப் பனைமரம்தான் தனித்து நின்றது.

"மழையோ ஓய்வதாக இல்லை. சடசடவென்று சலிக்காமல் கொட்டிற்று. காற்று பேய் ஊதலாக ஊதிகொண்டு சுழன்று சுழன்று அடித்தது. மேலே வானம் இரவைப் போல இருண்டு கொண்டிருந்தது. அந்த சமயம் வானத்திலே நீலம் எங்கிருந்தது. இருந்திருக்கும் என்று சந்தேகம் தோன்றிவிடும் போலிருந்தது. நாலாபக்கமும் துவளும் தங்கக் கொடிகளாகப் பளீர் பளீர் என்று மின்னல்கள் மின்னின. காற்றின் இடைவிடாத குமுறலுக்கு மேலே விட்டுவிட்டு, திடீர் திடீர் என்று இடிகளின் முழக்கம் கேட்டது. மேற்கே வெகுதூரத்திலிருந்து முழக்கம் ஆரம்பித்து, நகர்ந்து நகர்ந்து வந்து, தலைக்குமேலே முழங்கி, தாண்டிச் சென்று கிழக்கே எங்கேயாவது ஒரு மூலையில் சென்று அதிர ஒலித்து ஓய்ந்தது. ஆனால் அது ஓயுமுன் இன்னொன்று தன் பயங்கரமான திருவிளையாடலை ஆரம்பித்துவிடும். இப்படி ஒரு நாழி, இரண்டு நாழி சென்றது.

"பயங்கரமான இடம், பயங்கரமான வேளை. பயங்கரமான இடியும் மின்னலும். தெய்வபக்தியும் மூடமான பயங்களும் நிறைந்த கோஷ்டி அது. ஒவ்வொரு தடவையும் காதில் வந்து அறைவது போல இடி ஒலிக்கும்போது பாழ் மண்டபமும், அம்மண்டபத்தில் இருந்தவர்களும் ஒருங்கே நடுங்கினார்கள். ஒவ்வொருவருடைய மனத்திலும் பயங்கரமான சிந்தனைகள் தோன்றின. எல்லாரும் வயதானவர்கள்தான். ஆனாலும் தங்கள் பெண், பேத்திமார்களை மறுபடி ஒருதரம் பார்க்காமல் அவர்களில் யாரும் இறக்கச்

சித்தமாயில்லை. ராமேசுவரமும் காசியும் போய்ப் புண்ணியம் சம்பாதித்தவர்கள்தான். எனினும் அவர்கள் மற்றெல்லா விதத்திலும் ரொம்பவும் சாதாரணமான மனிதர்கள்தான். பயத்தையும் பாவங்களையும் களைந்து விட்டவர்கள் அல்ல. இடியைத் தெய்வத்தின் தூதன் என்று நம்பிப் பயங்கொள்ள அவர்கள் எல்லாருக்கும் போதிய காரணங்கள் இருந்தன. பூமி மட்டத்துக்குச் சற்று உயரமான இடத்தில்தான் இடி விழுந்தால் விழும் என்று அந்த நாட்களில் ஒரு நம்பிக்கையிருந்தது. அது விஞ்ஞான சாஸ்திரப்படி எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. ஆனால் அன்று அந்தப் பாழ் மண்டபத்தில் ஒதுங்கியிருந்தவர்கள் எல்லாருக்கும் இந்த விஷயத்தில் பரிபூரணமான நம்பிக்கை இருந்தது. இடி விழுந்தால் மண்டபத்தில் விழலாம் அல்லது எதிரே இருபது கஜத்துக்கப்பால் நின்ற மொட்டைப் பனை மரத்தில் விழலாம். எதில் விழும்? பனை மரத்திலா? மண்டபத்திலா? ஒவ்வொரு தடவையும் வானத்தில் இடி குமுறும்போது அந்த முப்பத்தேழு பேர் மனதிலும் இந்த வேதனைமிகுந்த சிந்தனைதான் தோன்றிற்று. மண்டபத்தின்மேல் இடிவிழுந்து விடுமானால் அவர்களில் ஒருவராவது ஊர் திரும்ப முடியாது என்பது நிச்சயம்.

“திடீரென்று ஒரு கிழவர் பேசினார். இடியும் மழையும் காற்றும் சேர்ந்து முழங்கிய அச்சமயம் அவர் குரல் மெல்லியதாகக் கிறீச்சென்று பலவீனமாக மற்றவர்கள் காதில் விழுந்தது. “நம்மில் யாரோ ஒருவன் துர்பாக்கியசாலி இருக்கிறான். அவர் ஊர் திரும்ப வேணும் என்று கடவுள் சித்தமில்லை போலிருக்கிறது. தெய்வம் நம்மில் யாரையோ சிட்சிக்கவே இந்தப் புயலையும் இடியையும் அனுப்பியிருக்கிறது...

“இப்படிச் சொல்லிவிட்டுக் கிழவர் அங்கு நின்றவர்களுடைய முகங்களைப் பார்த்தார். ஆணும் பெண்ணும் - அவர்கள் எல்லாரும் முகத்தில் பீதியுடனும் கலவரத்துடனும் நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் கிழவர் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் மட்டிலும் அவர்கள் மனதில் உறைத்தது. ஆனால் பதில் என்ன சொல்லுவது என்று அவர்களில் யாருக்கும் தெரியவில்லை.

“கிழவர் மேலும் சொன்னார்: ஆடுகள் மாதிரி மிரள மிரள விழித்துக் கொண்டு நின்று கொண்டிருப்பதில் சாரமேயில்லை. இந்த இடியும் மின்னலும் நம்மில் யாருக்காகவோதான் காத்துக் கொண்டிருக்கிறது என்றே வைத்துக் கொள்வோம். அதைப் பற்றி



யோசித்துப் பிரயோசனமில்லை. தயங்கியும் பிரயோசனமில்லை. ஆனால் யாருக்கு விபத்து நேரிடும் என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அதனால் மற்றவர்களுக்காவது நலம் ஏற்படும். நம்மில் ஒருவர் தவிர மற்றவர்கள் எல்லாமாவது தப்பிவிடலாம். அதற்கு ஒரே ஒரு வழிதான் எனக்குத் தோணுகிறது. அதைச் சொல்லிவிடுகிறேன். நீயா, நானா என்று யோசித்துத் தயங்கிக் கொண்டிருப்பதில் சாரமில்லை. நாம் ஒவ்வொருவராக மழையில் இறங்கிப்போய் அதோ தெரியும் மொட்டைப் பனைமரத்தைத் தொட்டுவிட்டு வரவேணும். கடவுள் சித்தம் அதுவானால் இடி மண்டபத்தில் விழுந்து தாக்கி நம்மெல்லாரையும் அழிப்பதற்குப் பதில் அந்த துர்பாக்கியன் பனைமரத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும்போது மரத்தின் மேல் விழட்டும். மற்றவர்களாவது தப்பலாம். இதைத் தவிர தப்ப வேறு வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. விஷப் பரிக்ஷைதான். ஆனாலும் வேறு என்ன செய்வது? முதலில் நானே போய் அந்தப் பனை மரத்தைத் தொட்டுவிட்டு வரேன்.

“அவர்களுடைய பதிலை எதிர்பார்க்காமலே கிழவர் கொட்டும் மழையில்இறங்கி, விசிறியடித்துக் கொண்டிருந்த காற்றை எதிர்த்துத் தள்ளாடித் தள்ளாடி அந்த மொட்டைப் பனைமரத்தை நோக்கி நடந்தார். மண்டபத்தில் இருந்தவர்களின் மனதில் என்ன இருந்தது என்று விவரிக்க இப்போது நேரமில்லை. நேரமிருந்தால் அது என்னால் செய்யக்கூடிய காரியமா என்று எனக்கே தெரியவில்லை. கிழவர் போய்ப் பனை மரத்தைத் தொட்டுவிட்டு மறுபடியும் பாழ்மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார். சொட்டச் சொட்ட நனைந்திருந்தார். அவர் ஒரு வார்த்தையும் பேசவில்லை. அவர் மண்டபத்துக்குள் வந்ததுமே ஒரு கிழவி தைரியமாக இறங்கிப் பனை மரத்தை நோக்கி நடந்தாள். அவள் திரும்பியபின் இன்னொருத்தர் போனார். இடையில் யாரும் எதுவும் பேசவில்லை. இந்த அசாதாரணமான மௌனம் அங்கு கடைசி மனிதன் மண்டபத்தை விட்டுக் கிளம்பும்வரையில் நிலவியது. கடைசி வரையில் மொட்டைப் பனை மரத்தை நோக்கிக் கிளம்பாமல் பின்வாங்கிய, மனிதன் ஐம்பது வயதான ஒரு பிரம்மசாரி. அவரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும், ஸ்திரீகள் உள்பட எல்லாரும், மொட்டைப் பனை மரத்தைப் போய்த் தொட்டுவிட்டு வந்து விட்டார்கள்.

“கடைசியாகத் தன் ‘டர்ன்’ வந்தும் அந்தக் கிழப் பிரம்மசாரி

தயங்கினார். சிறிதுநேரம் மண்டபத்தின் ஓரத்தில் போய் நின்றார். 'இதென்ன விளையாட்டு!' என்று முணுமுணுத்தார். யுக்தியை முதலில் சொன்ன கிழவர் சொன்னார். 'இதென்னப்பா இது? விதியைத் தடுக்கவும் முடியுமா? நாங்களெல்லாம் போக வில்லையா? எங்கள் மனதில் எல்லாம் சாவு என்ற பயமில்லையா என்ன?'

"அப்படியும் அந்தப் பிரம்மசாரி போகத் தயங்குவதைக் கண்டு மற்றவர்கள் முணுமுணுத்தார்கள். தெய்வகோபத்துக்குப் பாத்திர மானவர் அவர்தான் என்று மற்றவர்களுக்கு இதற்குள் உள்ளங்கைக் கனிபோல விளங்கிவிட்டபடியால் அவர் காரியம் பலருக்கு வெறுப்பாயிருந்தது. அவரை எல்லாருமாகச் சேர்ந்து கொண்டு ஏசாத குறை. 'போறேன்,' என்று வேண்டா வெறுப்பாகச் சொல்லிக் கொண்டே மண்டபத்திலிருந்து அந்தப் பிரம்மசாரி மழையில் இறங்கினார். மழை இப்பொழுது சற்றுக் குறைவாகவே தூறிக் கொண்டிருந்தது. ஆனால் இடி முழக்கம் மட்டும் சற்றும் குறைந்த பாடில்லை. கொட்டுகிற மழையில் கூடத் தயக்கத்தால் அந்த முப்பத்தேழாவது மனிதர் சற்று மெள்ளவே பனைமரத்தை நோக்கி நடந்தார். முப்பத்தாறு ஜோடிக் கண்கள் அவரைத் தொடர்ந்தன. மொட்டைப் பனைமரத்தை நெருங்கிய பின்னும் அவர் அதைக் கை நீட்டி உடனே தொட்டுவிடாமல் ஒரு கணம் தயங்கினார். பனைமரத்தைத் தொட நீட்டிய கையுடன் ஒருகரம் திரும்பிப் பாழ் மண்டபத்தைப் பார்த்தார். நின்றிருந்தவர்களுடைய கண்களெல்லாம் தன் மேலேயே மொய்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். பனை மரத்தின் பக்கம் கண்களைத் திருப்பி ஓரடி முன் எடுத்துவைத்துக் கையால் பனைமரத்தைத் தொட்டார். அதே வினாடி பளீர் என்று ஒரு மின்னல் அடித்தது. காதுக்குள்ளேயே வந்து இடிப்பதுபோல ஒரு சப்தம் கேட்டது. அவருடைய புலன்கள் எல்லாம் உணர்ச்சியிழந்தன."

இந்தக் கட்டத்தில் கொண்டு வந்து சுவாமிநாதன் கதையை நிறுத்திவிட்டுச் சிறிதுநேரம் சும்மாயிருந்தார்.

"உம். பாக்கியையும் சொல்லுங்களேன்," என்று ராஜகோபால் அவரைத் தூண்டினார்.

"பாக்கியா?" என்றார் சுவாமிநாதன். "பாக்கி சொல்ல வேண்டியது அதிகமில்லை. அந்த முப்பத்து ஏழாவது மனிதன்



மறுபடி தன் புலன் உணர்ச்சிகளைப் பெற்று, பனைமரத்தில் இருந்த தன் கையை எடுத்துவிட்டுத் திரும்பி மண்டபத்தைப் பார்க்கப் பத்தே வினாடிகள்தான் பிடித்தது. ஆனால் அவர் அப்படித் திரும்பிப் பார்த்தபோது அந்தப் பாழடைந்த மண்டபமே காணவில்லை. அது இருந்த இடத்தில் கருகி உருகின கல்லும் மண்ணுமாக ஒரு மேடுதான் இருந்தது. கதை அவ்வளவுதான். நாழியும் ஆகிவிட்டது. கிளம்புவோமே!" என்று சொல்லிவிட்டுச் சுவாமிநாதன் எழுந்து மதகுமேல் விரித்திருந்த தன் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு கிளம்பினார்.

நாங்களும் உடன் கிளம்பினோம். சுவாமிநாதன் சொன்ன கதையின் அந்தரார்த்தம் எங்களில் யாருக்கும் பரிபூர்ணமாக விளங்கவில்லை. அவருக்கே சரியாகப் புரிந்திராது என்றே நான் எண்ணினேன்.

கிளம்பிச் சில நிமிஷங்கள் கழித்து ராஜகோபால் சொன்னார்: "தெய்வ சித்தம் அப்படி ஒருவன் பிழைக்கவேணும். மற்ற முப்பத்தாறு பேர்கள் இறக்கவேணும் என்று இருந்ததே தவறு என்று நான் சொல்லுவேன்."

"தெய்வமில்லை ஐயா, தெய்வமில்லை. விதிதான்!" என்றார் சுவாமிநாதன்.

"விதியோ, தெய்வமோ, எதுவானால் என்ன? நடந்த காரியம் மிகவும் கொடுமையானது என்றே எனக்குத் தோன்றுகிறது. இந்தக் கதையின் அடிப்படையான தத்துவமே தவறானது என்று நான் சொல்லுவேன்."

"அடிப்படை, வெளிப்படை, தத்துவம், தத்துவமல்லாதது என்பதை எல்லாம் பற்றி நான் பேசவில்லையே! நான் கேள்விப்பட்ட ஒரு கதையைச் சொன்னேன். அவ்வளவுதான்," என்றார் சுவாமிநாதன்.

"என்ன சொன்னாலும் இந்தக் கதையில் வருகிறபடிதான் விதியும் தெய்வமும் நடக்கும் என்றால் எனக்கு வாழ்க்கையிலேயே கசப்புத் தட்டிவிடும்," என்றார் ராஜகோபால்.

"அதைப் பற்றித் தெய்வமோ, சுவாமிநாதனோ அவ்வளவாகக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை," என்றேன் நான்.

"இம்மாதிரி விஷயங்களை எல்லாம் பற்றி நாம் ஆழ்ந்து யோசிக்கத்தான் யோசிக்கலாமே தவிர முடிவாகத் தீர்மானமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை," என்றார் பொன்னம்பலம்.

இப்படிப் பேசிக்கொண்டே நாங்கள் ரஸ்தாவில் மிகவும் இருண்ட பிரதேசத்திற்கு வந்துவிட்டோம். இரண்டுபுறமும் மரங்கள் அடர்த்தியாக உயர்ந்து வளர்ந்திருந்தன. எதிரேயும் பின்னும் ஒரே இருட்டு. அண்ணாந்து பார்த்தால் மரங்களின் இலைகளினூடே ஒரு கணம் வானத்து நட்சத்திரம் ஒன்று கண் சிமிட்டி மறைந்து போவது தெரியும். ஆனால் அண்ணாந்து பார்த்துக்கொண்டே நடக்கக்கூடிய ரஸ்தாவல்ல அது. ஒருவர் பக்கத்தில் ஒருவராக நாங்கள் ஐந்து பேரும் ரஸ்தாவை அடைத்துக்கொண்டு நடந்தோம். நாழியாகிவிட்டபடியால் வீடு போய்ச் சேரவேணும் என்று சற்று வேகமாகவே நடந்தோம்.

திடீரென்று ராமசாமி, "ஏனையா, ராஜகோபால்! உமக்குப் பக்கத்தில் வருவது யார்?" என்று கேட்டார்.

"ஏன்? நான்தான்," என்றேன்.

"உம்மைச் சொல்லவில்லை. ஐயா. ராஜகோபாலுக்கு அந்தண்டைப்பக்கம் வருவது யார் என்று கேட்டேன்," என்றார் ராமசாமி.

எங்கள் 'லைனில்' ஒரு கோடியில் ராமசாமியும், மறுகோடியில் ராஜகோபாலும் வந்துகொண்டிருந்தனர். ராமசாமி அந்தக் கேள்வியை இரண்டாவது தரம் கேட்டதும் ராஜகோபாலும் அவருக்கு வலது புறம் வந்துகொண்டிருந்த நானும் இடது பக்கம் திரும்பிப் பார்த்தோம். அங்கு யாருமில்லை.

சுவாமிநாதன் சொன்னார்: "எனக்குக்கூட என்னவோ தோன்றிற்று. ராஜகோபாலுக்கு இடதுகைப்புறம் யாரோ வருவது போலத்தான் இருந்தது. வெள்ளைச் சட்டை தெரிவது போல் இருந்தது," என்றார்.

ராஜகோபால் மறுபடியும் ஒருதரம் திரும்பிப் பார்த்தார். அப்புறம் கெட்டிக்காரத்தனமாகப் பத்தடி நடப்பதற்குள் என்னை ஓரத்திற்குத் தள்ளிவிட்டு நடுவில் புகுந்துகொண்டார். மற்ற நாட்களில் இது நடந்திருந்தால் நாங்கள் அவரை இதுபற்றி இல்லாத கேலியெல்லாம் செய்திருப்போம். ஆனால் அன்று எங்கள் மனம் கேலியில் ஈடுபட மறுத்தது.



எங்கள் ஞாபகமெல்லாம் எங்களுடன் அன்றும் 'வாக்' வந்திருக்க வேண்டிய ஆனால் ஆஸ்பத்திரியில் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த எங்கள் கோஷ்டியின் ஆறாவது நபரைப் பற்றியே இருந்தது. மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்தவர்களாகக் கால்மணி நேரத்தில் நாங்கள் ஊர் வீதியை அடைந்தோம்.

வீதி மூலையில் நின்று பேசிக் கொண்டிருந்த யாரோ சிலரின் வார்த்தைகளில் சில எங்கள் காதில் விழுந்தன. "நேற்று மோட்டார் விபத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் கிடந்த இருவரில் ஒருவர் இறந்துவிட்டார்."

இறந்தது யார் என்று விசாரிக்கத் தேவையில்லை. எங்களுக்குத் தெரியும்.

●

*கலாமோகினி*
*1941*